பெண்மை பேசும்...

# கண்ணம்மா




**இந்த வார, 'அரசி'யல் மொழி கன்னியாகுமரியில் உருப்பெற்று, அங்கிருந்து நகர்ந்து சென்னையில் மையம் கொண்டு, பின் மேலும் வலுப் பெற்று நகர்ந்து, குஜராத்தில் கரையைக் கடந்தது. ஆம்! குமரி முதல் குஜராத் வரையிலான அரசியல் பற்றி கல்லூரி மாணவியர் பேசியதில் இருந்து...**

இடம்
லயோலா கல்லூரி, சென்னை.

### உண்மையான 'ஒக்கி' பாதிப்பு குமரிக்கா; நம் முதல்வருக்கா?

அறிவியல் வளர்ச்சி உச்சமா இருக்குற இந்த காலத்துலேயும், புயல் வருதுன்னு முன்கூட்டியே கணிக்க முடியாம போனது துரதிருஷ்டம் தான். ஆனா, புயல் தாக்கினதுக்கு அப்புறமும் அரசோட செயல்பாடு மந்தமா தான் இருந்தது. பல நாட்கள் கழிச்சு, அதுவும் மக்களோட தொடர் போராட்டத்துக்கு அப்புறம் களத்துக்கு முதல்வர் போனது, குமரியோட இன்னொரு துயரம்! 'ஒக்கி' புயல் மட்டுமில்ல, மீனவர்களோட பல பிரச்னைகளுக்கு தீர்வா இன்னமும் உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டதா தெரியலை. மக்கள் எல்லாத்தையும் அமைதியா கவனிச்சுட்டு தான் இருக்காங்க. ஆர்.கே.நகர் மக்களும் இதுல அடக்கம்ங்கிறதை முதல்வர் புரிஞ்சுக்கணும்.

— சு.அனுந்த்ரா, இதழியல்.


■ சு.அனுந்த்ரா

### ஆர்.கே.நகர் தேர்தல் அரசியல்வாதிகளுக்கானதா; மக்களுக்கானதா?

சந்தேகமே வேண்டாம்; இந்த இடைத்தேர்தல் அரசியல் தலைமைகளின் சுய கவுரவத்துக்கானது தான்! இ.பி.எஸ்., — ஓ.பி.எஸ்., ரெண்டு பேருக்கும், தொண்டர்களுக்கு மத்தியில தங்களை தலைவர்களா நிரூபிக்க வேண்டிய கவுரவ பிரச்னை. போட்டிக்கு ஜெயலலிதா இல்லாத சூழ்நிலையில, தன் தலைமையில ஸ்டாலின் இந்த தேர்தலை சந்திக்கிறார். இது, அவரோட தலைமையை நிரூபிக்க வேண்டிய கவுரவ பிரச்னை. தினகரனுக்கோ, மக்களும், அ.தி.மு.க., தொண்டர்களும் இன்னும் தன்னை ஆதரிக்கிறாங்கன்னு நிரூபிக்க வேண்டிய கவுரவப் பிரச்னை. இப்படி, எல்லாபக்கமும் கவுரவம் அரண் கட்டி நிற்குது. இதுக்கு நடுவுல சிக்கிட்டு இருக்குற மக்கள் தான் பாவம்!

— பா.விஜயலெட்சுமி, இதழியல்.


■ பா.விஜயலெட்சுமி

### இன்னொரு முறை ஆர்.கே.நகர் தேர்தல் ரத்தானால்?


■ ஆ.சலேத் ஸ்டெபி கிராப்

இந்த முறையும் ரத்தானா அது தேர்தல் ஆணையத்தோட தோல்வியைத் தான் காட்டும். வேட்புமனு பரிசீலனை அன்னைக்கு, நடிகர் விஷாலோட வேட்புமனுவை நிராகரிச்சிட்டதா செய்தி வந்தது; கொஞ்ச நேரத்துலேயே ஏத்துக்கிட்டதா ஒரு செய்தி. ராத்திரி 11:00 மணிக்கு மேல, நிராகரிப்பு உறுதின்னு அதிகாரபூர்வமா அறிவிப்பு பண்றாங்க! என்ன நடந்ததுன்னு இப்போ வரைக்கும் எங்களுக்குப் புரியலை! திடீர் நடவடிக்கையா தேர்தல் அதிகாரியை வேற மாத்தியிருக்காங்க. இதெல்லாம், தேர்தல் ஆணையம் தடுமாறுறதை வெளிப்படையா காட்டுது. ஆனாலும், இந்த தடவை தேர்தல் நடந்திடும்னு தான் எனக்குத் தோணுது!

— ஆ.சலேத் ஸ்டெபி கிராப், இதழியல்.

### மோடியின் குஜராத் தேர்தல் பிரசாரம் பற்றி?

இந்த தேர்தல்ல அவரோட வழக்கமான பாணியை பார்க்க முடியலை. ஒருவிதமான பதற்றம் அவர்கிட்டே இருந்ததை நல்லாவே உணர முடிஞ்சது. பாகிஸ்தானை கோதாவுல இழுத்தது தான் இதுக்கு சிறந்த சாட்சி! தவிர, ஹார்திக் படேல் ஆதரவு, காங்கிரசுக்கு இருக்கிறதால, பா.ஜ.,வோட வெற்றி நுாறு சதவீதம் உறுதின்னு சொல்ல முடியலை. இந்த உண்மை மோடியையும் தொந்தரவு செஞ்சிருக்கலாம்ங்கிறது என் எண்ணம். ஏன்னா, குஜராத்தை முன்னிறுத்தி தன்னை நாடு முழுக்க தெரியும் படி செஞ்சவர் அவர். அங்கே ஒரு ஏமாற்றம்னா அஸ்திவாரம் அசைஞ்சிடுமே!

— சு.சுபரத்னா, இதழியல்.


■ சு.சுபரத்னா

## மச்சி... நீ கேளேன்!

**'வெளங்கிடும்' இந்த வார்த்தை நினைவுபடுத்தும் நபர் — நிகழ்வு?**

**சலேத்:** இ.பி.எஸ்., — புயல் அடிச்சாலும் எம்.ஜி.ஆர்., நுாற்றாண்டு விழாவை நடத்தியே தீருவேன்னு இருந்தா தமிழகம் வெளங்கிடும்.

**அனுந்த்ரா:** கேப்டன் — ஏற்கனவே மக்கள் மறந்துட்டாங்க; இந்த நிலைமையில தேர்தல்லேயும் பங்கெடுக்காம இருந்தா வெளங்கிடும்.